2026 – 27 ஆம் ஆண்டு கல்லூரியில் முதலாம் ஆண்டு சேரவிருக்கும் மாணவர்களுக்கு உதவிடும் வகையில்

# TSC - HELP DESK - மாவட்ட வாரியாக தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள்!

## 2வது பட்டியல் – தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு வீரமணி அறிவிப்பு!

2026 - 27 ஆம் ஆண்டு கல்லூரியில் முதலாமாண்டு சேரவிருக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டியாக TSC – HELP DESK சேவையை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் மாவட்ட வாரியாக கல்லூரிகளில் பயின்று வரும் தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகளை இதன் வழியாக தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு வீரமணி அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

**மாவட்டம் : திருவண்ணாமலை**

| வ.எண் | மாணவர் பெயர் | கல்லூரி பெயர் | மொபைல் எண் |
|---|---|---|---|
| 1 | ஜெ. தினேஷ் | அருணை பொறியியல் கல்லூரி | 8870184459 |
| 2 | எஸ். புவனேசன் | அருணை பொறியியல் கல்லூரி | 7904802437 |
| 3 | மு. திவ்யபாலன் | அருணை பொறியியல் கல்லூரி | 8681864995 |

மொத்த மாணவர்கள்: 03

**புதுச்சேரி**

| வ.எண் | மாணவர் பெயர் | கல்லூரி பெயர் | மொபைல் எண் |
|---|---|---|---|
| 1 | சஞ்சய்தரன் | ஸ்ரீ மணக்குள விநாயகர் சட்டக் கல்லூரி | 9442300040 |
| 2 | ரித்தீஸ் | தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி | 8754655392 |
| 3 | கௌதம் | ஆச்சார்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி | 7418945252 |
| 4 | நமிதா | ஜிப்மர் மருத்துவக் கல்லூரி | 9043290585 |
| 5 | ஜோன்ஸ் | மோதிலால் நேரு தொழில் நுட்ப கல்லூரி | 6381676139 |
| 6 | கிறிஸ்துராஜ் | மோதிலால் நேரு தொழில் நுட்ப கல்லூரி | 7639526860 |
| 7 | சாருமதி | புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் | 8300757500 |
| 8 | மித்ரா | ஸ்ரீ மணகுல விநாயகர் பொறியியல் கல்லூரி | 9944428752 |
| 9 | இர்பான் அஹமத் | பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் கல்லூரி | 9176536469 |
| 10 | கீர்த்தி குமார் | டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி | 8220457624 |
| 11 | சரவணன் | டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி | 9677362744 |
| 12 | காமேஷ் | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரி | 6380712448 |
| 13 | பார்த்திபன் | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரி | 9894988565 |
| 14 | தரணி | ஸ்ரீ வெங்கடேஸ்வரா பிசியோதெரபி கல்லூரி | 6383446489 |
| 15 | பெ. ஹரிதா | மகளிர் பொறியியல் கல்லூரி | 9952273627 |
| 16 | எஸ். அபினயா | மகளிர் பொறியியல் கல்லூரி | 9092122184 |
| 17 | பெ. கீர்த்தனா | ஆச்சாரியா பொறியியல் கல்லூரி | 9443448463 |
| 18 | பி. ஹர்திக் | ஆச்சாரியா பொறியியல் கல்லூரி | 7339293296 |
| 19 | பெ. ஜனனி | செந்தில் கல்வியியல் கல்லூரி | 9566469426 |
| 20 | கே. ஜீவிதா | செந்தில் கல்வியியல் கல்லூரி | 8015904206 |

மொத்த மாணவர்கள்: 20

**ஈரோடு வீரமணி**, செயலாளர், தி.மு.க மாணவர் அணி

---


இணக்கமாக இருந்தால் வெகுமதி!

# பா.ஜ. ஆட்சியில் சுதந்திரமான பத்திரிகை தண்டிக்கப்படுகிறது!

## மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மே.5-

உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு காங்கிரஸ் தலைவர் கார்கே எக்ஸ் தளத்தில் நேற்று பதிவிட்டுள்ளதாவது: 2014ம் ஆண்டு முதல் உலக பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில் இந்தியாவின் நிலை சீராக சரிந்து வருகிறது. செய்தி அறைகளை அமைதியாக்குவதற்காக சங் பரிவார் சட்ட கட்டமைப்புகளை அதிகளவில் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2014ம் ஆண்டு முதல் பாஜ ஆட்சியின் கீழ், உலக பத்திரிகை சுதந்திர குறியீட்



டில் இந்தியாவின் நிலை சரிந்து, 157வது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

சங் பரிவார், செய்தி அறைகளை அமைதியாக்குவதற்காக சட்டக் கட்டமைப்புகளை அதிகளவில் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறது. அவதூறு சட்டங்கள், தேசியப் பாதுகாப்பு விதிகள் மற்றும் விரிவான குற்றவியல் சட்டங்கள் ஆகியவை நீதியின் கருவிகளாகப் பயன்படுத்தப்படாமல், அச்சுறுத்தலின் கருவிகளாகவே பயன்படுத்தப்படுகின்றன. 2014 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் 36 பத்திரிகையாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

உபா போன்ற கடுமையான சட்டங்களின் கீழ் பல பத்திரிகையாளர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பாஜ ஆளும் மாநிலங்களில் பத்திரிகையாளர்கள் தங்கள் பணியைச் செய்ததற்காக கொல்லப்படுகிறார்கள். பா.ஜ. ஆர்.எஸ்.எஸ்.சின் செய்தி தெளிவாக உள்ளது; சுதந்திரமான பத்திரிகை தண்டிக்கப்படும், கீழ்ப்படிபவர்களுக்கு வெகுமதி அளிக்கப்படும். ஊடகத்தின் சில பிரிவுகள் ஆளும் தரப்பின் கருத்துக்களை எதிரொலிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

---

சென்னைக்கு 5 மாதம் நீர் இருப்பு!

# கிருஷ்ணா நீர் வரத்து 10 நாளில் தொடங்கும்!

சென்னை, மே 5-

கிருஷ்ணா நதியில் இருந்து நீர் விநியோகம் மே மாத இடையில் மீண்டும் தொடங்கும். தற்போது சென்னை நகருக்கான நீர் இருப்பு சீராக உள்ளது. மழை பெய்யாவிட்டாலும் சென்னை நகரின் தினசரி விநியோகத்துக்கான சுமார் 1,246 மில்லியன் லிட்டரை குறைந்த பட்சம் 5 மாதங்களுக்கு தொடர முடியும். அந்த அளவுக்கு இருப்பு உள்ளது என்று சென்னைக் குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது. கோடை வெப்பம் அதிகரித்து வரும் நிலையில் சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் நீர்த் தேக்கங்களில் நீர் இருப்பு சற்று குறைந்துள்ளது. இதனிடையே கிருஷ்ணா நதியின் நீர் வரத்தை முன்னிட்டு நீர் நிலைகளை இணைக்கும் கால்வாய்களில் மேம்பாட்டுப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. ஆந்திராவில் இருந்து மே மாதம் இரண்டாம் வாரத்தில், அதாவது இன்னும் ஏறக்குறைய 10 நாட்களில் நீர் விநியோகம் மீண்டும் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு சென்னை நகரின் நீர் இருப்பு நிலை சீராக உள்ளதாகவும், மழை பெய்யாவிட்டால் குறைந்த பட்சம் 5 மாதங்களுக்கு தினசரி நீர் விநியோகம் தொடரும் என்றும் சென்னைக் குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது. சமீபத்திய புள்ளி விவரத்தின்படி செம்பரம்பாக்கம் மற்றும் செங்குன்றம் உள்ளிட்ட 5 முக்கிய நீர்த் தேக்கங்களின் மொத்த நீர் இருப்பு 7,681 மில்லியன் கன அடியாக இருந்தது. இந்த அளவு அந்த நீர்த் தேக்கங்களின் மொத்த கொள்ளளவில் சுமார் 65.3% ஆகும். இது கடந்த ஆண்டின் மே தொடக்கத்தின் இதே நாளுடன் ஒப்பிடும்போது 62 மில்லியன் கன அடி. இருப்பினும் வீராணம் ஏரி தொடர்ந்து நீர் விநியோகத்தை நிறைவு செய்து வருகிறது. நீர் சேமிப்பு மட்டங்களை சமநிலைப்படுத்தவும், சென்னைக்கு குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யவும் கிருஷ்ணா நீர் வழங்கல் அவசியமாக இருந்தது.

இதற்கிடையே, ஆந்திராவின் எல்லையில் உள்ள கண்டலேறு பூண்டி கால்வாயில் பராமரிப்பு பணியை மேற்கொள்ள ஆந்திர மாநில அதிகாரிகள் கடந்த மார்ச் மாதம் கண்டலேறு நீர்த் தேக்கத்தில் இருந்து பூண்டிக்கு வரும் நீரை நிறுத்தி வைத்திருந்தனர். பராமரிப்பு பணிகள் நிறைவடைய உள்ள நிலையில், ஆந்திர மாநிலத்தின் தேவைகளை நீர்த் தேவையை பூர்த்தி செய்த பிறகே கிருஷ்ணா நீர் மே மாத இரண்டாம் வாரத்தில் சென்னை எல்லைக்குள் வரும் வாய்ப்புள்ளது. சென்னைக்கு குடிநீர் வழங்க நீர் சேமிப்பை அதிகரிக்க, இந்த கால கட்டத்தில் சென்னை நகருக்கு சுமார் குறைந்தபட்சம் 3 ஆயிரம் மில்லியன் கன அடி கிருஷ்ணாநீர் வந்தடையும் என்று எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

# சென்னை ரயில்வே கோட்டத்தில் டிக்கெட் இன்றி பயணம்!

## 12 லட்சம் வழக்குகள் பதிவு!

சென்னை,மே 5-

கடந்த நிதியாண்டில், சென்னை ரயில்வே கோட்டத்துக்கு உட்பட்ட ரயில் நிலையங்கள், ரயில்களில் டிக்கெட் இல்லாமல் பயணம், முறையற்ற பயணம் உள்ளிட்ட பிரிவுகளில் 12.24 லட்சம் வழக்குகள் பதிந்து, ரூ.65.16 கோடி வசூலிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: சென்னை ரயில்வே கோட்டத்தில் கடந்த நிதியாண்டில் (2025-26), ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

டிக்கெட் இல்லாமல் பயணம், முறையற்ற பயணம் மேற்கொண்டது தொடர்பாக,12.24 லட்சம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூ.65.16 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**அறிவுறுத்தல்**

பயணிகள் ரயில் நிலைய வளாகத்துக்குள் நுழைவதற்கு முன்னரே முறையான டிக்கெட்களைப் பெற்று, அபராதம் மற்றும் சட்ட நடவடிக்கைகளைத் தவிர்க்க அறிவுறுத்தப்படுகின்றனர்.

பயணிகள் தங்கள் பயணத்தைத் தொடங்குவதற்கு முன் டிக்கெட்களை சரிபார்த்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அவர்கள் கூறினர்.

---

புவி வெப்பமயமாதல், இயற்கைப் பேரிடர்களிலிருந்து

# மனித குலத்தைக் காக்க நிரந்தரத் தீர்வுகளை நோக்கிச் செயல்படவேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மே 5–

புவி வெப்பமயமாதல், இயற்கைப் பேரிடர்களிலிருந்து மனித குலத்தைக் காக்க நிரந்தரத் தீர்வுகளை நோக்கிச் செயல்படவேண்டும்! சுற்றுச்சூழல் பாதுகாப்பை முன்னிறுத்தி, மக்கள் இயக்கம் – தீவிரப் பிரச்சாரத் திட்டங்கள்! ”சுற்றுச்சூழல் காப்பது பிறருக்காக அல்ல; நமக்காக! என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

இவ்வாண்டு நமது தமிழ்நாட்டில் மட்டுமல்ல ‘புவி வெப்பமயமாதல்’ காரணமாக உலகெங்கும் கோடைக் கொடுமையை நாம் அனைவரும் தாங்கொணாத துன்பத்துடன் தாங்கிக் கொண்டிருக்கிறோம். இதற்கு தற்காலிகத் தீர்வுகள், சகிப்புடன் ஏற்றல் பற்றித்தான் நம் மக்களில் பெரிதும் பேசுகிறோம்.

**விழிப்புணர்வை ஏற்படுத்துக!**

கோடை வெப்பத் தாக்குதல், பருவ மழை குறைவான அளவு பொழிதல் மூலம் பற்றாக்குறை, திடீர் இயற்கைப் பேரிடர் போன்ற பலவற்றிற்கு சரியான தீர்வுகள் பற்றிய விழிப்புணர்வை நமது மக்களிடையே ஏற்படுத்தியாக வேண்டியது நமது கட்டாயக் கடமை என்பதை இயற்கை அழுத்தமாகச் சொல்லிக் கொண்டேயிருக்கிறது.

நமது இயக்கமான திராவிடர் கழகத்தின் சார்பிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை – மக்கள் இயக்கத்தை இந்தக் காலகட்டத்தில் தீவிரப்படுத்துவது அனைவரது அன்றாடக் கடன் அல்லவா?

ஒத்த கருத்துள்ள ‘பூவுலகின் நண்பர்கள்’ போன்ற அமைப்பினரையும் ஒருங்கிணைத்து, முதலில் சீரிய பரப்புரையை நடத்திட வேண்டியது அவசர, அவசியம் ஆகும்.

காற்று மாசு அடைவதைத் தடுக்க ஆங்காங்கு மரம், செடிகளை ஏராளம் நடுவதை, வளர்ப்



பதை ஏதோ ‘சடங்காச்சாரமாக’க் கருதாமல், உயிர்க் கடமையாகச் செய்யவேண்டும்.

**வீட்டுக்கு வீடு, மரம், செடி வளர்ப்போம்!**

குறுகிய இட வசதி என்றாலும், அதற்கு ஏற்ப, தக்க ஆலோசனைகளை, உரியவர்களிடமிருந்து நாம் பெறுதல் முதல் கடமை.

இரண்டாவது, அவரவர் வசதி வாய்ப்புக்கேற்ப இந்தப் பணியை ஏதோ அரசு கட்டளையாகக் கருதாமல், நமது இன்றியமையாமைப் பாதுகாப்புப் பணிகளில் தலையாயது என்றே முடிவு செய்து, இப் பணியில் அனைவரும் உற்சாகம் காட்டவேண்டும்.

மக்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தீவிரப் பிரச்சாரத் திட்டத்தை, அவர்களை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்திச் செயலில் இறங்க வைக்கும் முயற்சி வெற்றிகரமாக்கப்படல் வேண்டும்.

‘தினத்தந்தி’ நாளேட்டில், ‘தினம் ஒரு தகவல்’ என்ற தலைப்பில், நேற்று முன்தினம் (2.5.2026) அனைவரும் அறியவேண்டிய, ஒரு முக்கிய தகவல் வெளிவந்துள்ளது.

மரங்கள் மனித குலத்திற்குத் தரும் அருட்கொடை (அறிவியல் படி) இதோ:

“நன்றாக வளர்ந்த ஒரு மரம், ஒரு நாளைக்கு 2 முதல் 10 மனிதர்கள் சுவாசிக்கத் தேவையான ஆக்சிஜனை உற்பத்தி செய்யும் என கண்டறியப்பட்டு உள்ளது. ஒரு முதிர்ந்த மரம் ஓராண்டுக்கு ஏறக்குறைய 260 பவுண்டு ஆக்சிஜனை உற்பத்தி செய்யும். பொதுவாக, மரங்கள் கார்பன்டைஆக்சைடு மற்றும் சூரிய ஒளியைப் பயன்படுத்தி ஆக்சிஜன் மற்றும் குளுக்கோசை உற்பத்தி செய்கின்றன. மரங்கள் பகல் நேரத்தில் ஆக்சிஜனை வெளியிடும். அதே வேளையில், இரவு நேரத்தில் சுவாசிப்பதற்காக அதில் சிறிதளவு பயன்படுத்துகின்றன. மரங்களைப் பொறுத்த வரை, அகன்ற இலை கொண்ட மரங்கள், அவற்றின் அதிக இலை மேற்பரப்பு காரணமாக சிறிய இலைகளைக் கொண்ட ஊசியிலை மரங்களை விட அதிக ஆக்சிஜனை உற்பத்தி செய்கின்றன.

இவற்றை எல்லாம்விட, ஒரு இடத்தில் மரங்கள் அதிக அளவில் இருந்தால் அந்த இடத்தின் வெப்பநிலை சுமார் 5 டிகிரி செல்சியஸ் வரை குறைந்து குளிர்ச்சியாக காணப்படும் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒரு புள்ளி விவரப்படி, ஒரு மனிதனுக்கு 699 மரங்கள் என்ற விகிதம் அமெரிக்காவில் காணப்படுகிறது. இதுவே ஆஸ்திரேலியா 3,266, பிரான்சு 203, எத்தியோப்பியா 143, கிரீன்லாந்து 4,964 என்ற அளவில் காணப்படுகிறது. இந்தியாவில் ஒரு நபருக்கான மரங்களின் எண்ணிக்கை உலகின் பிற பகுதிகளை ஒப்பிடும்போது குறைவாகவே உள்ளது. எதிர்காலத்தில் இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெப்பநிலையின் தாக்கம் குறைய வேண்டும் என்றால், மேற்கண்ட நாடுகளை போல மரங்களை ஏராளமாக வளர்க்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

கட்சி, ஜாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டு உருவாக்கிச் செய்ய வேண்டியது

**அவசர, அவசியம்!**

பசுமைப் பரப்பை அதிகரிப்பது, காற்று மாசுபாடைக் குறைப்பது உள்ளிட்டவற்றோடு நம்மிடம் ஏற்கெனவே இருக்கும் இயற்கை வளங்களையும் நம்மைக் காக்கும் அரண்களாகக் கருதி அவற்றைப் பாதிக்கும் திட்டங்களையும், கொள்கைகளையும் அடையாளம் கண்டு தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்து, நாட்டின் தொழில் வளர்ச்சி என்ற கண்ணோட்டமும் பாதிக்கப்படாமல், இரு வேறுபட்ட விஷயங்கள் ஒன்றோடொன்று அழகாகக் கலந்து, அமைதியாக இணைந்து செயல்படுவதைப் போன்ற Harmonious Blend Reconciliation திட்டங்கள்மூலம் மக்கள் நலனை முதன்மையாக்கி, ஒரு தொடர் இயக்கத்தைத் தன்னார்வ தொண்டர்கள் மூலம் – கட்சி, ஜாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டு உருவாக்கிச் செய்ய வேண்டியது அவசர, அவசியம்.

ஊடகங்கள், குறிப்பாக தொலைக்காட்சிகள் – மக்களுக்கு இதன் தேவை பற்றிய விழிப்புணர்வூட்ட, ஒவ்வொரு நாளும் சுவையும், சுவாரசியமும் கொண்ட நிகழ்ச்சிகளை உருவாக்கி, மக்களிடையே ஒரு புத்தெழுச்சியை உருவாக்குவது மிகவும் இன்றியமையாததாகும்.

இப்போது செயற்கை நுண்ணறிவு (AI) நுழைகிறது. இதன் பார தூர விளைவுகள், எதிர் விளைவுகள் – சுற்றுச்சூழல் கண்ணோட்டத்துடன் மக்களிடையே பரப்புரை, கருத்துரை மூலம் விளக்கி வருவது முக்கியம்.

அரசுகளையே எதிர்பார்க்காமல், மக்கள் அமைப்புகளே தங்களது இணக்கமான ஒருங்கிணைப்பின்மூலம் இதற்குத் தக்க பரிகாரம் காணவேண்டும்; காண முடியும்.

**இயற்கை நுண்ணறிவை உருவாக்குவோம்!**

மனித குலம் சந்திக்காத சவால்களா? மனிதனின் ஒப்பற்ற பகுத்தறிவு இதற்கும் தக்க விடையைத் தீர்வாகத் தருவது உறுதி!

”சுற்றுச்சூழல் காப்பது பிறருக்காக அல்ல; நமக்காக என்ற இயற்கை நுண்ணறிவை உருவாக்க உழைப்போம், வாரீர்! வாரீர்!!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

கடும் சிரமத்திலும் நன்மைகள் இருக்கு!

# வயல் வெளிகளுக்கு கர்ப்ப ஓட்டம் உருவாக்கும் அக்னிநட்சத்திர காலம்!

## புவியியல் நிபுணர்கள் தகவல்!

சென்னை, மே 5-

கோடைகாலம் என்றாலே கொளுத்தும் வெயிலின் உக்கிரமே ஒவ்வொருவர் மனதிலும் வந்து போகும். அதிலும் கோடையின் உச்சம் என்று சொல்லப்படும் அக்னி நட்சத்திர காலம் என்றால், கூடவே ஒரு பீதியும் தொற்றிக் கொள்கிறது. இந்த காலத்தில் சுட்டெரிக்கும் வெயிலை அக்னி நட்சத்திர வெயில், சித்திரை வெயில், கத்திரி வெயில் என்று பல்வேறு பெயர்களில் நாம் அழைத்து வருகிறோம்.

நாம் வாழும் பூமியானது 23.5 டிகிரி சாய்வான நிலையில் சூரியனை சுற்றி வருகிறது. இதுவே உலகில் கோடைகாலம் மற்றும் குளிர்காலம் நிகழ்வதற்கு காரணமாக உள்ளது. சூரியனின் கதிர்கள் எங்கெல்லாம் செங்குத்தாக விழுகிறதோ அந்த இடங்களில் எல்லாம் கோடைகாலம் உருவாகிறது. ஆண்டுதோறும் மார்ச் 23ம் தேதி சூரியன், பூமியின் நடுக்கோட்டிற்கு நேர் மேலிருந்து மெல்ல, மெல்ல வடக்கு நோக்கி நகர ஆரம்பிக்கும். இப்படி வடக்கு நோக்கி நகரும் சூரியன், கடக ரேகைக்கு நேர் மேலே இருக்கும். அதன் பிறகு சூரியன் தெற்கு நோக்கி, அதாவது பூமியின் நடுக்கோட்டை நோக்கி நகர ஆரம்பிக்கும். அப்போது பூமியின் நடுக்கோட்டிற்கு வடக்கே உள்ள நாடுகளில் கோடை காலமாக இருக்கும்.

அதே நேரத்தில், நடுக்கோட்டிற்கு தெற்கே உள்ள நாடுகளில் குளிர்காலமாக இருக்கும். அங்கு சூரியனின் கதிர்கள் சாய்வாக விழுவதே குளிர்ச்சிக்கு காரணம். இதில் சூரியக்கதிர்கள் பூமியை அதிகளவில் நெருங்கி வரும் கோடைகாலத்தின் இறுதி நாட்களே அக்னி நட்சத்திர காலம் என்று அழைக்கப்படுகிறது. இப்படி அக்னி நட்சத்திர காலம் நம்மை அதிர வைத்தாலும், அதில் சில நன்மைகளும் இருக்கிறது என்கின்றனர் புவியியல் ஆய்வாளர்கள்.

இது குறித்து வானிலை சார்ந்த புவியியல் ஆய்வாளர்கள் கூறியதாவது: பொதுவாக சித்திரை, வைகாசி மாதங்களில், பூமியானது சூரியனுக்கு அருகே செல்வதால் வெப்பம் கடுமையாக இருக்கிறது. இந்த வகையில் நடப்பாண்டு சித்திரை 21ம் தேதி முதல் வைகாசி 14ம் தேதி வரை (மே 4ம் தேதி முதல் 28ம் தேதி வரை) அக்னி நட்சத்திர காலம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலகட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட வயல்வெளிகளில் வெப்பத்தின் காரணமாக வெடிப்புகள் ஏற்படும். அதன் வழியாக பூமியின் வெப்பம் வெளியேறும். அந்த பிளவுகளில் காய்ந்த இலைகளும், சருகுகளும் நுழைந்து விடும். அக்னி நட்சத்திரம் முடிந்து வைகாசி மாதத்தின் பிற்பகுதியில் வீசும் காற்றால் பூமி குளிர்ந்து விடும். அதனையொட்டி, மழை பெய்தால் நிலத்தின் வெடிப்புகள் மூடப்பட்டு விடும். இதனை ‘கர்ப்ப ஓட்டம்’ என்று புவி மேலாண்மை வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த வகையில், இயற்கையாகவே வயலுக்கு நல்ல உரம் கிடைக்கிறது. அடுத்த வேளாண்மைக்கும், வயல் வளம் பெற்று விடுகிறது.

இதன்படி கோடையின் கொடும் தாக்கமான அக்னி நட்சத்திர காலம், பூமிக்கு ஒரு நன்மையை கொடுக்கிறது என்றால் அது மிகையல்ல. எனவே, பீதிக்கு இடம் கொடுக்காமல் மருத்துவ நிபுணர்கள் வழங்கியுள்ள அறிவுரைகளை பின்பற்றி, மக்கள் அக்னி நட்சத்திர காலத்தை எதிர்கொள்ள வேண்டும்.

இவ்வாறு புவியியல் ஆர்வலர்கள் கூறினர்.

---

எரிபொருள் நெட்வொர்க்கை சிதைக்க

# ரஷ்யாவின் 2 கப்பல்களை அழித்தோம்!

## உக்ரைன் அதிபர் தகவல்!

கீவ், மே 5 -

ரஷ்யாவின் 2 எண்ணெய் கப்பல்களை உக்ரைன் ராணுவம் தாக்கி அழித்தது என்று அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில் சேர உக்ரைன் விரும்பியது. இதற்கு ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்தது. இதை ஏற்க மறுத்த உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 2022ம் ஆண்டு பிப்ரவரி மாதம் போர் தொடங்கியது. கடந்த 4 ஆண்டுகளாக இரு நாடுகளும் ஒன்றின் மீது ஒன்று தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், டெலிகிராம் சமூக வலைதளத்தில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வெளியிட்ட பதிவில் நேற்று கூறியிருப்பதாவது:

ரஷ்யாவின் எரிபொருள் நெட்வொர்க்கை சிதைக்க உக்ரைன் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. அந்த வகையில் ரஷ்யாவின் நிழலாக செயல்பட்டு வந்த 2 எண்ணெய் கப்பல்களை ட்ரோன்கள் மூலம் தாக்கி அழித்தோம்.

அந்தக் கப்பல்கள்தான் ரஷ்ய கச்சா எண்ணெய்யை கொண்டு சென்று வந்தன. இப்போது அந்த கப்பல்கள் இல்லை. அந்த 2 கப்பல்களையும் ரஷ்யாவின் நோவோராசியிக் துறைமுகத்தின் நுழைவு வாயில் பகுதியில் தாக்கி அழிக்கப்பட்டது. தரை, வான், கடல் வழியாக தொலைதூர இலக்கை தாக்கும் உக்ரைனின் ராணுவ நடவடிக்கை தொடரும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**உயிரிழப்பு எதுவும் இல்லை!**

முன்னதாக ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட தகவலில், “ரஷ்ய தலைநகர் மாஸ்கோ மற்றும் லெனின்கிரேன் உட்பட 15 பகுதிகளில் தாக்குதல் நடத்த அனுப்பிய உக்ரைனின் 334 ட்ரோன்களை இடைமறித்து அழித்தோம். இதில் உயிரிழப்பு எதுவும் ரஷ்ய தரப்பில் இல்லை” என்று கூறியிருந்தார்.